www.tamilarangam.net

# அகதிகளாக சிதறியுள்ள தமிழ்மக்களுக்கு

தமிழர்களாகிய நாமும் மற்றைய `மூன்றாம் உலக நாட்டினரைப்' போல் புதிய வெளிநாட்டவர் அகதிகள் சட்டத்தால் நெருக்கடிக்குள்ளாகியுள்ளோம். இதுவரைகாலமும் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டும் தமிழர்கள் என்ற காரணத்தினால் மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த டுல்டுங் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலமைகள் இன்னு ம் அதிகரிதது்ள்ளதேயன்றி குறையவில்லை. இந்நிலையில் ஜேர்மனி அரசாங்கமானது அகதி அந்தஸ்து கோரும் ஒவ்வோரு தமிழரையும் திருப்பியனுப்பப்பட்டால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று நிருபிக்குமாறு கேட்பது மனிதாபிமானமற்ற செயலாகும். இதற்கு எதிராக நாம் இணைந்து நடவடிக்கை எடுப்பதோடு ஒவ்வொரு தனிப்பட்டவரும் தமது வழக்கறிஞர் மூலமாக எதிர்நடவடிக்கை எடுக்கவேண்டும். வழமைபோலல்லாது இம்முறை அகதிகள் தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்க ஜேர்மனி அரசு முடிவு செய்துள்ளது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளும் (பிரான்ஸ்,இங்கிலாந்து,சுவீஸ்....) கனடிய அரசும் இதையே பின்பற்ற ஆலோசிக்கின்றன.

இந்நாடுகளின் நீண்டகால முடிவு தற்போது செயற்படுத்தப்பட உள்ளமைக்கு பலகாரணங்கள் உள்ளன. சோசலிச நாடுகள் எனப்பட்ட கிழக்கு ஐரோப்பியநாடுகளின் தோல்வியும் முக்கிய காரணமாக உள்ளது. குறிப்பாக ஜேர்மனினியில், கிழக்கு-மேற்கு ஜேர்மனி இணைவையடுத்து ம், வளைகுடா போரையடுத்தும் சாதாரண ஜேர்மன் மக்கள் மேல் விழுந்துள்ள வரிச்சுமையினால் அரசாங்கம்மேல் எற்பட்டுள்ள எதிர்ப்பை திசைதிருப்புவதற்கும் இன்னடவடிக்கை வாய்ப்பாக உள்ளது. அதிகரித்துவரும் புதிய நாசிகளின் பிரச்சாரம் மக்களிடத்தே நன்கு எடுபடுகிறது. இதற்கு எதிராக ஆளும் கட்சியோ அல்லது முக்கிய எதிர்க்கட்சியோ பி ரச்சாரம் செய்யாமல் உள்ளனர். இந்நிலையில் அகதிவிண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் -பொருளாதார அகதிகளே, அவர்கள் திருப்பியனுப்பப்பட வேண்டியவர்கள்தான் என்ற கருத்து நிலவுகிறது. (திருப்பி அனுப்பப்படுவதனால் ஏற்படக்கூடிய உயிராபத்து பற்றி சாதாரண ஜேர்மன் மக்களுக்கு தெரியவாய்ப்பில்லை.) 500 ஆண்டுகளாக ஐரோப்பிய,அமெரிக்க நாடுகள் எமது நாடுகளைச் சுரண்டுவதும், இதனால் சிதைந்துகொண்டிருக்கும் எமது நாடுகளின் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக-அணிதிரளும் மக்களை அடக்குவதற்கு, எமது அதிகாரவர்க்கத்தினருக்கு ஆயுத உதவியும் செய்துவருகின்றன. உ+மாக 1989ல் 700கோடி டொய்ஷ்மார்க் ஆகயிருந்த மே. .ஜேர்மனியின் உத்தியோக பூர்வ ஆயுத விற்பனை ஒருவருடத்தில், அது 1990ல் இருமடங்காக 1300 கோடி டொ.மா் ஆக பெருவளர்ச்சி அடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (Frankfurter Rundschau 14.3.91)

காலம் காலமாக தொடரும் மலிவான மூலவள,உணவுப் பொருட்கள், உழைப்புச்சுரண்டல் என்பவை இன்நாடுகளின் செல்வவளர்ச்சிக்கு முக்கிய காரணமென்பது இங்கு மறைக்கப்பட்டுள்ளதில், இன்நாட்டு மக்கள்-எமதுமக்கள் சோம்பேறிகள் அதனாலேயே ஏழைகளாக உள்ளமைக்கு காரணமென்றும், இங்கு வாழும் 'மூன்றாமுலக' மக்களாகிய எம்மை தம து செல்வத்தில் வாழும் ஒட்டுண்ணிகளாகவும் கருதுகின்றனர். இதற்கு நிற,இன வெறியும் பெரிதும் உதவுகிறது.

இன்னிலையில் நாமிங்கு சிறிது காலமாவது இருப்பதற்கான உரிமைக்காக குரல்கொடுப்பதோடு நின்றுவிடாது இலங்கையிலும்,இந்தியாவிலும் பட்டினியாலும் மருத்துவ சுகாதார வசதியில்லாமலும் காடுகள்,பதுங்குகுழிகள்,முகாம்களிலும் அகதிகளாக்கப்பட்டுள்ள எமது மக்களைப் பற்றியும் சிந்திப்போம். நாம் பல்வேறு நாடுகளில் அகதிகளாக சிதறியுள்ள போதும் எமது நாட்டில் ஒரு இடைக்கால அமைதிக்காவது வழிவகுக்க எம்மால் முடியும். பால்மா வாங்க முடியாமையினால் துடிக்கும் குழந்தைகளும், உயிர், உளரீதியான பாதிப்புக்குள்ளாகும் எமது மக்களுக்கு இதனால் சிறிதளவாவது உதவ முடியும். அதற்கான நடவடிக்கையை இப்போதே ஆரம்பிப்போம்.

Tamil Info. Frankfurt/Main

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்